1973 ஆகஸ்ட் 11]

கொண்டிருக்கிறார்கள். பொதுமக்கள் நீண்ட தூரம் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக ஜெயங்கொண்டத்திலே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

Collection of Land Revenue and loans in Tiruttani taluk

*90 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether instructions have been given to the District Collector of Chingleput to postpone the collection of land revenue and loans in Tiruttani taluk consequent on the failure of monsoon rains; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பல பகுதிகளில் வறட்சி நிலை நிலவுவது குறித்து முறையீடுகள் வந்ததன் பேரில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு நிவாரண மளிப்பது குறித்து அரசு ஆலோசித்தது. வருவாய் வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் ஜூலை 1972 முதல் டிசம்பர் 1972 வரை நில வரி மற்றும் அரசாங்கக் கடன்கள் வசூலிப்பதை ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆணையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பியதற்கு நன்றி. ஆனால், இப்பொழுது இந்த ஆண்டிற்குத் தேவையான வரி நிலுவையையும் கடன் பாக்கியையும் மட்டும் வசூல் செய்துவிட்டு, பழைய பாக்கி இருந்தால் அதை வேண்டுமானால் தள்ளிப் போடப்படும் என்னும்படியான உத்தரவை அரசு இட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், அங்கே வருவாய்த் துறை அதிகாரிகள் மிகக் கடுமையான வகையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கம், ஏற்கெனவே பிறப்பித்திருக்கிற உத்தரவு, '1382-ஆம் பசலி ஆண்டில் செலுத்த வேண்டிய கடன் தவணை நிலுவைத் தொகையைச் சேர்த்து ஓராண்டுத் தவணை நிலுவைத்

தொகையை அதற்கான வட்டியுடன் வசூலிக்கவேண்டும். ஆண்டுத் தவணைத் தொகை நிலுவை ஐந்து தவணைகளுக்கு மேலிருந்தால், நிலுவைத் தொகை முழுவதையும், ஒவ்வொரு பசலி ஆண்டிலும் செலுத்த வேண்டிய தவணை நிலுவைத் தொகையைச் சேர்த்து 1382-ம் பசலி ஆண்டிலிருந்து தொடங்கி ஐந்து சம ஆண்டுத் தவணைகளில் வசூலிக்க வேண்டும். இவ்வாறு செலுத்த கடனாளிகள் தவறும்போது கடன் நிலுவைகளைச் சுருக்க வகையில் வசூலிக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். இதுதான் அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. இதை மீறி யாராவது நடந்துகொள்வார்களானால், மாண்புமிகு உறுப்பினர்கள், அதைத் தெரிவித்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, பழைய பாக்கிகள் பூராவும் அடுத்த ஆண்டிலிருந்து தவணைகளாக வசூலிக்கப்படுமென்று சொன்னார்கள். இப்பொழுதுள்ள பாக்கியைச் செலுத்திவிட்டு, அடுத்த ஆண்டிலிருந்து பழைய பாக்கியையும் சேர்த்துக் கட்டுவது விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கும்—இப்பொழுது கஷ்டமாக இருப்பதால், பஞ்சம் ஏற்பட்டு, வசூல் செய்யாமலிருக்கின்ற தவணைகளை, கடைசி தவணையிலிருந்து வசூலிக்கப்படும் என்ற முறையை மாற்றி அமைத்து, இலகுவாக விவசாயிகள் கட்டக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்கம் வசூலிக்க வேண்டிய கடனைப் பொறுத்து, ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கொடுக்கவேண்டிய கடன் தவணையை நீடிப்பது, ஆண்டுத் தொகையோடு சேர்த்து 5 ஆண்டுகள் பாக்கி இருந்தால், நடப்பாண்டுத் தவணையையும் பழைய பாக்கியிலே ஒரு தவணையையும், 1+1 என்ற அடிப்படையிலே வசூலிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கடன் தவணையைப் பூராவும் ஒத்திவைப்பது, 5 ஆண்டுக்குப் பிறகு வசூலிப்பது சாத்தியமல்ல.

திரு. க. மு. இராசகோபால்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் போன ஆண்டு கடுமையான பஞ்சம் நிலவியது—மழை அதிகமாக இல்லை. ஆனால், திருத்தணி வட்டத்திற்கு மட்டிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்தாரே, என்னுடைய தொகுதி பெரும் வறட்சிப் பகுதி. அதை ஒதுக்கியதற்குக் காரணம் ஏதாவது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு அல்ல. போர்டு ஆப் ரெவினியுதான் சிபாரிசு செய்திருக்கிறது. ரெவினியூ போர்டு மெம்பர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் கொடுத்த அறிக்கையின்பேரில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது.

Bridge works in Ambasamudram area

* 91 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the stage at which the construction of the bridges across Gatana river and Vowal Odai in Ambasamudram in Tirunelveli district stands?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இவ்விரு பால வேலைகளுக்கும் 1971-ம் ஆண்டு அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வேலைகளின் திருத்திய மதிப்பீடுகள் அரசு ஒப்புதலுக்காகத் தலைமைப் பொறியர் தயாரித்துக் கொண்டிருப்பதால் இன்னும் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

சிவகெங்கைசெட்டி ஊரணி

* 92 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கையில் உள்ள செட்டி ஊரணி கரையை உயர்த்தி ஆழப் படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, 16, 17 ஆண்டுகளுக்கு முன்பு அங்கே தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு 21 மைல் சுற்றளவிலே இருந்தாலும் மக்கள் செட்டி ஊரணிக் கரையிலேயிருந்து குடிநீர் எடுத்துக்கொண்டு போனார் கள். அந்தப் பகுதிக்கு மிக முக்கியமானது இந்த ஊரணி. எனவே மறுபடியும் பரிசீலித்து, அந்த செட்டி ஊரணிக் கரையை ஆழப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சிவகங்கை நகராட்சிக்குச் சொந்தமான செட்டி ஊரணிக் கரை ஏறத்தாழ 115 எக்கர் பரப்பளவில் உள்ளது. அதில் தண்ணீர் தேங்கி இருக்கும் பகுதியின் அளவு